

புதுக்கோட்டை மாவட் டம் சுறம்பக்குடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் கறம்பக்குடி திமுக தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான தவ.பாஞ்சாலன் புதுக்கோட்டையில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக 2 வது முறையாக மீண்டும் பதவி ஏற்று கொண்டார். புதுக்கோட்டையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் அமைச்சர், தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.எம்.அப் துல்லா, கவிச்சுடர்.கவிதைப்பித்தன், மேயர் திலக வதி செந்தில், பரணி கார்த்திகேயன், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், சுப.சரவணன், சு.சண்முகம் எம்.எம்.பாலு மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மறைந்த நீடாமங்கலம் பேரூர் செயலாளர் ஆர்.ராஜசேகரன் அவர்களின் உடலுக்கு கழக முதன்மை செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் கோவி.செழியன், முரசொலி எம்.பி., மாவட்ட செயலாளர்கள் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், சோம.செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு,ஆர்.ராமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

### தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை சார்பில்

# திருச்சியில் சாவித்திரிபாய் புலே பிறந்த நாள் விழா!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்று புகழாரம்!

திருச்சி, ஜன. 5 -

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை சார்பாக திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற சாவித்திரிபாய் புலே பிறந்தநாள் விழாவில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் உரை வருமாறு:

அனைவருக்கும் முதலில் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாவித்திரிபாய் புலே அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் இந்த நிகழ்வுதான் 2026இல் நான் உரையாற்றும் முதல் நிகழ்வு. அதில் நான் பெருமை அடைகிறேன்.



திருச்சியின் பெருமை வாய்ந்த ஜமால் முகமது கல்லூரியில், சாவித்திரிபாய் புலே அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். அதுவும் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை சார்பாக! இது நம்மால் மட்டுமே முடியும்! தமிழ்நாட்டில் மட்டுமே முடியும்!

சாவித்திரிபாய் புலே தனது கணவருடன் இணைந்து சமூகப் பணிகளில் ஈடுபட துவங்கியதால் உறவினர்கள் கைவிட்டார்கள். வீட்டை விட்டே வெளியேற்றினார்கள். அப்போது அவர்களுக்கு ‘உஸ்மான்’ எனும் இஸ்லாமிய நண்பர்தான் அடைக்கலம் தந்தார். அந்த உஸ்மான் அவர்களின் சகோதரிதான் இந்தியாவின் முதல் பெண் இஸ்லாமிய ஆசிரியர் எனும் பெருமையும் பெற்றார். அவர் பெயர் ‘பாத்திமா!’. அவரும் சாவித்திரிபாய் புலே அவர்களுடன் இணைந்து சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

இவ்விழாவின் மூலம் சாவித்திரிபாய் புலே அவர்களின் பிறந்தநாளை மட்டும் நாம் கொண்டாடவில்லை. தமிழ்நாட்டின் சமத்துவத்தையும் சமூகநீதியையும் நாம் கொண்டாடுகிறோம்.

சாவித்திரிபாய் புலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், கைம்பெண்களுக்கும் கல்விக் கற்றுக்கொடுத்தார். இதனால் ஆதிக்க இந்து சனாதனவாதிகள் கோபம் கொண்டார்கள். இதனால் அவர் மீது மலம் வீசினா ர்கள். ஆனால் நாமோ அவர் மீது மலர் தூவுகிறோம். இதுதான் நமக்கும் அவர்களுக்கும் இருக்கும் வித்தியாசம்.

தன் மீது மலம் வீசப்பட்டாலும் சிறிதும் தளராமல் ஒடுக்கப்பட்டவர்களுக்குக் கல்விக் கற்றுக்கொடுத்த புரட்சியாளர்தான் சாவித்திரிபாய் புலே!

சில மாதங்களுக்கு முன்பு ‘புலே’ எனும் திரைப்படம் வெளிவந்தது. இந்தியாவின் முதல் மகாத்மா எனப் போற்றப்படும் ஜோதிராவ் புலே அவர்களின் வரலாற்றை சொல்லும் திரைப்படம். இவர்தான் சாவித்ரிபாய் புலே அவர்களின் கணவர்.

இந்தப் படத்தின் ட்ரைலர் வெளிவந்த போதே ஆதிக்கவாதிகள் எதிர்க்கத் தொடங்கினார்கள். தணிக்கை குழுவினர் இப்படத்தின் பல காட்சிகளை நீக்கச் சொல்லியுள்ளார்கள். படம் வெளிவருவதற்கு பல தடைகளையும் ஏற்படுத்தினார்கள்.

அரசியல் ரீதியாக பார்த்தால் அமலாக்கத் துறையை வைத்துதான் ஒன்றிய அரசு மிரட்டுகிறது. அரசியல் செய்கிறது எனப் புரியும். ஒன்றை நுணுக்கமாக நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். பண்பாடு இலக்கிய ரீதியாகவும் அவர்கள் மிரட்டி க்கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதற்கான சாட்சியாகத்தான் புலே திரைப்பட பிரச்சினையை சொல்கிறேன்.

அமலாக்கத் துறை மட்டுமல்ல... திரைப்பட தணிக்கை வாரியம்சாகித்ய அகாடமி விருது வழங்கும் குழு என தன்னிச்சையாக இயங்க வேண்டிய அமைப்புகள் அனைத்தையுமே பா.ஜ.க. அரசு தன் கைக்குள் கொண்டு வந்துள்ளது.

தற்போது தமிழில் சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்படுவதில் கூட அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

1848ம் ஆண்டு இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாக, பெண் குழந்தைகளுக்கான பள்ளியை பூனேவில் தொடங்கினார். ஒன்பது குழந்தைகளுடன் தொடங்கப்பட்ட அப்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார் சாவித்திரிபாய் புலே. 1852ம் ஆண்டு அவரது பள்ளி மாணவமணிகளின் எண்ணிக்கை 150 ஆகவும், 1854ம் ஆண்டு 200ஐயும் எட்டியது.

‘இந்தியாவின் நவீன கல்வி மற்றும் பெண் கல்வியின் அன்னை’ எனப் போற்றப்படுபவர். அவர் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் ஆனது மட்டுமல்லாமல் தன்னிடம் படித்த 417 மாணவர்களை ஆசிரியர்களாக உருவாக்கியிருக்கிறார். இந்த தொடர்ச்சியின் மூலம் நாம் ஒன்றை புரிந்துகொள்ளலாம்! சாவித்திரிபாய் புலே அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த 417 ஆசிரியர்களும் பல்லாயிரம் அறிவார்ந்த மாணவர்களை உருவாக்கி இருப்பார்கள். அந்த பல்லாயிரம் மாணவர்கள் பல இலட்சம் மாணவர்களுக்கு கல்விக் கற்றுக்கொடுத்திருப்பார்கள். இதுதான் கல்வியின் சக்தி! ஆசிரியப் பெருமக்களின் பலம்!

சாவித்திரிபாய் புலே மிகச்சிறந்த கல்வியாளர் மட்டுமல்லாமல், மிகப் பெரும் சமூக சீர்த்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். பெண் சிசு கொலையைத் தடுக்கப் போராடினார். சிறு வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கப்படும் பெண்கள் கைம்பெண்களாக மாறும் அவலநிலை நிலவியது. அப்போது அவர்களுக்கு மொட்டை அடிக்கும் வழக்கமும் இருந்தது. அதை அடியோடு அழிப்பதற்கு போராடி வெற்றியும் கண்டவர்தான் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் சாவித்திரிபாய் புலே அவர்கள்.

இந்தக் கூட்டத்தில் B.Ed பயிலும் மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டுள்ளனர். அது எனக்கு கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றால் கற்பிக்கும் முறையை நீங்கள் கற்றுக்கொள்ளும் அதே வேளையில், சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்திய சாவித்திரிபாய் புலே போன்ற ஆசிரியப் பெருமக்களின் வரலாற்றையும் அறிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.

அவ்வகையில் உங்கள் முன் சாவித்திரிபாய் புலே பற்றி உரையாற்றுவது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது.

மராட்டிய மொழியின் கவிதை இலக்கியத்தில் மாபெரும் திருப்புமுனையைத் தந்தவரும் சாவித்திரிபாய் புலே அவர்கள்தான். ஆம் அவர் கவிஞராகவும் திகழ்ந்தார்!

“Be selfreliant, be industrious Work, gather wisdom and riches, All gets lost without knowledge We become animal without wisdom” அதாவது ”சுயசார்புடன் இரு, அயராது உழைத்திடு அறிவையும் செல்வத்தையும் சேர்த்திடு, அறிவில்லாமல் அனைத்தும் வீணாகிப் போகும், அறிவின்றி நாம் மிருகங்களாகவே மாறிவிடுவோம்” என அறிவின் அவசியத்தை தனது கவிதையின் மூலம் உணர்த்தினார்.

“போ, கல்வி பெறு, புத்தகத்தைக் கையில் எடு, அறிவும் சிந்தனையும் வளரும்போது அனைத்தும் மாறிவிடும், வாசிப்பே விடுதலை!” என தனது கவிதையின் மூலம் கல்வியின் அவசியத்தை உணர்த்தி ஆணையிட்ட சாவித்திரிபாய் புலே அவர்களின் புகழைப் போற்றுவோம்.

இந்நேரத்தில் ‘சாவித்திரிபாய் புலே’ அவர்களின் பெயரில் பெண் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் விருது வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்வோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு இதனை எடுத்துச்செல்வோம் என உறுதியளிக்கிறேன்.

தந்தை பெரியார்பேரறிஞர் அண்ணாமுத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் பக்குவப்படுத்தப்பட்ட நாம் சாவித்திரிபாய் புலே போன்ற புரட்சி யாளர்களை என்றும் போற்றுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற திமுக நிர்வாகிகள் செயற்குழு கூட்டத்தில் திராவிட சமத்துவ பொங்கல் விழா கொண்டாடுதல், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு,உள்ளிட்ட கழக ஆக்க பணிகள் குறித்து தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி.ஆலோசனைகள் வழங்கி பேசினார்.உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, தர்மபுரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன்,நகர செயலாளர்கள் நாட்டான்.மாது,எம்.பி.கௌதம்,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் நகர கழக நிர்வாகிகள்,தேர்தல் பணிகுழு தலைவர்கள் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டனர்.

### தஞ்சையில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்

# டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு” ஆலோசனைக் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே,என்,நேரு – அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

தஞ்சாவூர் ஜன.5 .

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேருமுன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு வருகிற 19.01.2026 திங்கட்கிழமை அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் தஞ்சையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேற்று தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள மஹாராஜா மஹாலில் ஜனவரி 19ஆம் தேதி தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு முன்னேற்பாடுகள் தொடர்பாக டெல்டா மண்டல நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அமை ச்சர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, முனைவர் கோவி.செழியன், சி.வி. கணேசன், சி.வ.வீ.மெய்யநாதன், எஸ்.எஸ். சிவசங்கர், மாநில அணி துணைச் செயலாளர் கவிஞர் சல்மா எம்.பி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என். நேரு தலைமை வகித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவர் கூறியதா வது -

சுமார் 1.25 லட்சம் மகளிர் அணியினர் பங்கேற்கும் இந்த பிரம்மாண்ட மாநா ட்டை சீரும், சிறப்புமாக ஒருங்கிணைந்து, மாநாட்டில் பங்கேற்கும் அனைவரின் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்து, டெல்டா மண்டலத்தில் நம் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் இந்த மாநாடு சிறப்பாக அமைய வேண்டும், இதற்காக மாவட்டச் செயலாளர்கள் இப்போதே அந்த பணிகளை தொடங்கி பொங்கல் நிருநாளுக்குள் முடித்திட வேண்டும், அனைவரும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் இவ்வாறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றி னார்.


தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ, க.வைரமணி, வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ, கே.கே. செல்லபாண்டியன், என். கௌதமன், தி.பழநிவேல், நாடா ளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, அருன் நேரு , தாட்கோ தலைவர் ந.இளையராஜா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.



மறைந்த நீடாமங்கலம் பேரூர் கழகச் செயலாளர் ஆர். ராஜசேகரன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி .ஆர் .பி.ராஜா மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். மாநில, மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நத்தம் அ. இராசாமணி**
**சனவரி 5 (2016)**



திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**